விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 66 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 26 இதழ் 174
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 10 — 8 — 1993


## 1988 1989 தேர்தல்களை ஆராய தெரிவுக்குழு நியமனம்

(கொழும்பு)

1989ம் ஆண்டு நடைபெற்ற 9வது நாடாளுமன்றத் தேர்தல் 1988ம் ஆண்டு நடைபெற்ற 2வது ஜனாதிபதி தேர்தல் பற்றிய தேர்தல்ஆணையாளர் வெளியிட்ட அறிக்கைகளை பரிசீலனை செய்ய, நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை அரசு நியமித்துள்ளது.

மேற்படி தேர்தல்கள், பற்றி தேர்தல் ஆணையாளர் அப்

(4-ம் பக்கம் பார்க்க)

### புலிகள் தாக்கிய

## வில்பத்து பகுதிக்கு பிரதமர் விஜயம்

(கொழும்பு)

புத்தளம், வில்பத்து காட்டுப்பகுதிகளை அண்டியுள்ள கிராமங்களிலிருந்து பொதுமக்களை வெளியேற வேண்டாம் என்று பிரதமர் திரு. ரணில் விக்கிரமசிங்கா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் வில்பத்து விலங்கியல் சரணாலயத்துக்கு விஜயம் செய்த அவர் அங்குள்ள கிராமப்புற மக்களை தமது குடியிருப்புகளை

(4-ம் பக்கம் பார்க்க)

# அரசை உடன் பதவிவிலகுமாறு எதிர்க்கட்சிகள் போர்க்கொடி!

### நாளை மறுதினம் நுகேகொடையில் ஆர்ப்பாட்டக் கூட்டம்!!

(கொழும்பு)

ஜனாதிபதி டி.பி.விஜேதுங்காவின் அரசு உடன் பதவிவிலக வேண்டுமென்று கோரி ஆறு எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து நாளைமறுதினம் 12ம் திகதி நுகேகொடையில் ஆர்ப்பாட்டக் கூட்டம் ஒன்றை நடாத்தத் திட்டமிட்டுள்ளன. உலக வங்கி மற்றும் சர்வதேச நிதிஸ்தாபனங்களுக்குக் கட்டுப்பட்டு விஜேதுங்காவின் அரசு செயல்பட்டுவருவதாலேயே அது உடன் பதவி விலக வேண்டுமென இந்த ஆறு எதிர்க்கட்சிகளின் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி விஜேதுங்காவின் அரசு உலக வங்கி விதித்துள்ள பல்வேறு நிபந்தனைகளை எதிர்க்கட்சிகளுக்கு மறைத்து வருவதாக எதிர்க்கட்சி பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி எதிர்க்கட்சி தரப்பில் தெரிவிக்கப்பட்டதாவது: ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் அரசு உடனடியாக பதவி விலகவேண்டும். எதிர்வரும் 12ம் திகதி நுகேகொடையில் நடைபெறும் எதிர்க்கட்சிகள் கூட்டத்தில்

(4-ம் பக்கம் பார்க்க)

## மட்டு. ராணுவ நடவடிக்கையில் ஒரு லட். குடும்பங்கள் பாதிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் அரச படைகள் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளால் ஒரு லட்சத்து 3 ஆயிரத்து 778 தமிழ்க் குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளதாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலிருந்து தெரியவருகிறது.

1990-ம் ஆண்டு ஜூன் மாதம் ஆரம்பித்த 2-வது ஈழப்போரிலேயே இவர்கள் பாதிப்படைந்ததாக தெரிய

(4-ம் பக்கம் பார்க்க)

## "அரச அதிபர் வந்தும் மாறுதல் ஏற்படவில்லை" - கைதி கவலை

(யாழ்ப்பாணம்)

"யாழ். அரசஅதிபர் யாழ்ப்பாணம் வரும்வரை உண்ணாவிரதத்தை கைவிடுமாறு கூட்டுப்படைத் தலைமைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க கேட்டிருந்ததை அடுத்து நீராகாரம் மட்டும் அருந்தினோம். ஆனால் அரச அதிபர் வந்தும் எம்மைப் பொறுத்த வரையில் எதுவித மாறுதலும் ஏற்படவில்லை".

மேற்கண்டவாறு விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உண்ணாவிரதம் இருக்கும் யுத்தக்கைதிகளுள் ஒருவரான பி. எஸ். பண்டார 'புலிகளின் குரல்' வானொலிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

(4ம் பக்கம் பார்க்க)

## இராணுவ அதிகாரிகளுடன் பேசுமாறு வலியுறுத்து

(கொழும்பு)

தம்மை விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு இராணுவ உயர் மட்டத்தை வற்புறுத்தும்படி, நேற்றுக் கொழும்பு பயணமாகிய யுத்தக் கைதிகளின் பெற்றோரிடம் உண்ணாவிரதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி கைதிகளின் பெற்றோர் மூவரும் பருத்தித்துறை

(4-ம் பக்கம் பார்க்க)

## கைதிகளின் உறவினர் மூவர் பலாலியில்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உண்ணாவிரதம் இருக்கும் யுத்தக்கைதிகளின் உறவினர் மூவர் நேற்றுக்காலை பலாலி இராணுவதளத்திற்கு சென்று தம்மை கொழும்புக்கு அழைத்துச் செல்லுமாறு கோரியதாக சிரேஷ்ட இராணுவப்பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

(4 ம் பக்கம் பார்க்க)

## கிளாலி-பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று செவ்வாய்க்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என தமிழீழ விடுதலைப்புலிகளின் நிதித்துறை அறிவித்துள்ளது.

## கனடாவில் தமிழ் மாணவர்மீது தாக்கு

(ஒட்டாவா)

கனடாவின் பிரசித்தி பெற்ற நகரங்களில் ஒன்றான ரொறன்ரோவின் அண்மையில் இடம்பெற்ற 'ஜெல்லென்சாங்' களியாட்ட விழாவில் கலந்து கொண்ட பின்னர் வீடு திரும்பிக்கொண்டிருந்த இலங்கைத் தமிழர் ஒருவர், கனேடிய இளைஞர் ஒருவரால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.

(2-ம் பக்கம் பார்க்க)

### மன்னார் - வவுனியா வீதியில்

## காவலரண்களை அமைக்க இராணுவம் முயற்சி

(வவுனியா)

மன்னார்-வவுனியா வீதியில் படையினர் தொடர் காவல் அரண்களை நிறுவி, பாரிய இராணுவ வேலி ஒன்றை அமைப்பதில் முழு முயற்சியுடன் ஈடுபட்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வீதியில் அமைந்திருந்த கட்டுப்பொத்த, சந்துருவெல, வீரவெல இராணுவ முகாம்கள், தமிழீழ விடுதலைப் புலிகளால் கடந்த ஆண்டில் தகர்க்கப்பட்டதை அடுத்தே படையினர் இம்முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஈ-இ

## வவுனியா ரயில் கொள்ளை பற்றி விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

வவுனியா இரவு மெயில் ரயிலில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற கொள்ளைச் சம்பவம் குறித்து, துரித விசாரணை நடத்தப்பட்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்துச் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஏ. சமரசேகரா தெரிவிக்கையில், ஆயுதம் தாங்கிய கொள்ளையர் இருவர் ரயிலில் ஏறி, வெளிநாட்டவர்களும், உள்நாட்டவர்களும் பிரயா

(2-ம் பக்கம் பார்க்க)

## திருமணம் என்ற போர்வையில் போதைவஸ்து கடத்தல்

(கொழும்பு)

போதைவஸ்து, இரத்தினக் கற்கள் போன்றவற்றை கடத்துவதற்காகவே, வெளிநாட்டவர்கள் பெரும்பாலும் இலங்கைப் பெண்களைத் திருமணம் செய்கின்றார்கள்.

தமது கள்ளக்கடத்தலுக்கு வசதியாக இந்த வெளிநாட்டவர்கள் கூடுதலாக கடற்கரை பகுதிகளை அண்டிய பிரதேசங்களிலேயே தமது உல்லாசவிடுதிகளை அமைத்துள்ளார்கள்.

இவ்வாறு, இலங்கைப் பெண்களை திருமணம் செய்வது சம்பந்தமாக புலனாய்வு நடாத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வருங்காலத்தில் இலங்கைப்

(2-ம் பக்கம் பார்க்க)

## ஷெல் வீச்சு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் இராணுவ முகாமிலிருந்து நேற்று நண்பகல் மூளாய் பகுதியை நோக்கி பலத்த ஷெல் தாக்குதல் இடைவிடாது மேற்கொள்ளப்பட்டதாக தெரியவருகிறது.

(ஈ)

## வரி விளம்பரம்

### தேவை

கோழித்தீன் வெற்றுப் பசுகள் வாங்குவோம். தொடர்பு: மில்க்வைற்.

(ஏ-3325)

### புத்தகங்கள் விற்பனை

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு இந்திய நாவல்கள், ஆச்சநெறிகள், ஆங்கிலதமிழ் களஞ்சியம் (மற்றும் டிக்செநெறி) ஸ்ரீகாந்தா புத்தகசாலை, நல்லூர்.

(ஏ-3277)

### புலமைப் பரிசில் பரீட்சை (ஆண்டு-5)

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை 12-08-93 வியாழன் மு. ப 6-00, மு. ப. 8-30, மு. ப. 11 ஆகிய நேரங்களில் நடைபெறும். விடைத்தாள் திருத்தி 13-08-93 வெள்ளி வழங்கப்படும். எம்மால் இவ்வருடம் வெளியிடப்பட்ட புலமை பரிசில் வினாத்தாள்களையும் ஆண்டு4 பரீட்சை வினாத்தாள்களையும் பெற்றுக்கொள்ளலாம் புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (இ-380)

### மில்க்வைற் சோப் சலவைத் தூள்

உங்கள் அபிமான மில்க்வைற் நீலசோப், மில்க்வைற் சலவைத்தூள், கிடைக்கவில்லையே என்ற கவலையை விடுங்கள், மில்க்வைற் நீலசோப், மில்க்வைற் சலவைத்தூள் மீண்டும் கடைகளில் கிடைக்கிறது. உள்ளூர் உற்பத்திகளைப் பாவனைக்குக் கொள்வோம். உள்ளூரில் பல நற்பணிகள் தொடர உதவுவோம். மில்க்வைற் மேலுறைகள், வெற்றுப் பக்கற்றுகள் சேகரித்து சிறந்த அன்பளிப்புகளைப் பெறுங்கள் மில்க்வைற் உள்ளூர் உற்பத்தி.

(ஏ 3327)

### நினைவூட்டுகிறோம்

அறிவுக்களஞ்சியம் சிறப்புப் பொதுஅறிவுப்போட்டி முடிவு திகதி 14-08-93. விபரங்களுக்கு அறிவுக்களஞ்சியம் 14வது இதழ் பார்க்க.

(எ-3319)

### வெளிவந்துவிட்டது

தோத்திரத்திரட்டு, கூட்டு வழிபாடு ரூபா 30/- (மலிவுப் பதிப்பு) அஷ்டலக்ஷ்மி புத்தகசாலை, நல்லை ஆதீனம், நல்லூர்.

(சி-396)

## தனிச் சிங்களத்தில் அதிபர் நியமனக் கடிதம்

(வட்டுக்கோட்டை)

ஸ்ரீலங்கா அதிபர் சேவையில் இரண்டாம் தர பதவி உயர்வுக்கு விண்ணப்பித்து போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டு நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கு நியமனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பாடசாலை அதிபர்களுக்கு தனிச்சிங்களத்தில் மட்டும் இந்த நியமனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தமையால் ஆள் மாறாட்டம் கொள்ளவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

சிங்களம் வாசிக்கத்தெரிந்த ஒருவர் வாசித்துச் சொல்லும் வரை இக்கடிதம் கடமைபுரியும் அதிபருக்குரிய நிரந்தர நியமனக் கடிதமா? அல்லது போட்டிப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டு நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றிய ஆசிரியர் ஒருவருக்கா என்பதைக் கண்டுபிடிக்க முடியாது திண்டாடவேண்டிய நிலை தனிச்சிங்களத்தில் அக்கடிதம் அனுப்பி வைக்கப்பட்டமையால் ஏற்பட்டதாம்.

(139)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

★ திடீரென ரசம் அருந்தவேண்டும் அல்லது உணவுடன் கலந்து உண்ணவேண்டும் எனத் தோன்றுகின்றதா?
அரைக்கத் தேவையில்லை, கொதிக்கத் தேவையில்லை

இதோ!

★ ஒரு நிமிடத்தில் சுவைமிகு ரசம் ★

தயார்

ஆச்சரியமாக உள்ளதா? ஆம்!

TASTY யின் புதிய அறிமுகம்

★ திடீர் ரசம் ★

(INSTANT RASAM)

(இரசாயன சேர்க்கைகள் அற்றது)

★ 1 தேக்கரண்டி திடீர் ரசக்கிறீமை 1 டம்ளர் சுடுநீரில் கலக்கும்போது சுவையான ரசம் உங்களுக்குக் கிடைக்கும்.

100 கிராம் பொதியின் விலை ரூ. 17/50 மட்டுமே.

★ இன்றே உங்கள் வியாபாரிகளிடம் கேட்டு வாங்கிப் பாவியுங்கள் ★

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

(எ-3324)

மோசாக்கின்றி வாடுகிறீர்களா?
தொழிலின்றி தவிக்கின்றீர்களா?

எதுவானாலும் இன்றே நாடுங்கள்:

காமதேனு விவசாய கால்நடைப் பண்ணை

உங்கள் அனைவரினதும்

உணவுத் தேவைக்கான:

- ★ இறைச்சிக் கோழிகள்
- ★ கோழி முட்டைகள்
- ★ தாரா முட்டைகள்
- ★ முயல்கள்
- ★ பசுப் பால்

சுய தொழில் வளர்ச்சிக்கான:

- ★ ஒரு மாத இரண்டு மாத வயதுடைய பேட்டுக் குஞ்சுகள்
- ★ நல்லின அடை முட்டைகள்
- ★ கால்நடை மருந்து வகைகள்
- ★ கால்நடை தீவனங்கள்
- ★ மரக்கன்றுகள்
- ★ முயல்குட்டிகள்

போன்றவை உங்கள் தேவைக்கேற்ப விற்பனை செய்யப்பட்டு வருகின்றன

★ அத்துடன் உங்கள் உற்பத்திப் பொருட்களாகிய எள்ளுப் பிண்ணாக்கு, சோளம், குரக்கன், கருவாடு, இறுங்கு தவிடு, தேங்காய் பிண்ணாக்கு என்பனவும் கொள்வனவு செய்யப்படுகின்றன.

★ மற்றும் நல்லின ஆடுகள் மூலம் இயற்கை முறைகளில் சினைப்படுத்தியும் கொடுக்கப்படுகின்றன

தரமான நிலையில் மலிவான விலையில் உங்கள் தேவைகளைப் பெற்றுக்கொள்ளவும் உங்கள் உற்பத்திகளை சந்தைப்படுத்தவும்

இன்றே நாடுங்கள்:

காமதேனு விவசாயக் கால்நடைப் பண்ணை
வெள்ளை வீதி,
சுன்னாகம்.

(எ 3328)

## நினைவு விழா

(நெல்லியடி)

2-ம் லெப்டினன்ட் சலூஜாவின் முதலாம் ஆண்டு நினைவு விழாவை முன்னிட்டு பண்ணை வேலைப் பயிற்சி நிலையம் கடந்த 5ம் திகதி மாலை 4.30 மணியளவில் கரணவாய் வண்ணாங்கிணையடியில் திறந்து வைக்கப்பட்டது.

திரு சி. சிவகுருதலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர். (160-இ)

## விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சி கூட்டுறவுச் சங்க சமாஜம் 'வாதுவ' கப்பலில் எடுத்துவந்த ரயர், டியூப், உரம், பிண்ணாக்கு ஆகியன இவ்வாரம் முதல் சகல கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விநியோகிக்கப்படுகிறது. -எஸ்

### கனடாவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படுகாயமடைந்த இலங்கைத் தமிழரான விநாசித்தம்பி என்பவர் உடனடியாக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார் சம்பந்தப்பட்ட கனேடிய இளைஞர் பொலிசாரின் காவலில் வைக்கப்பட்டுள்ளாராம்.

இச்சம்பவத்தை வன்மையாகக் கண்டித்த ரொறன்ரோ மாநகர முதல்வர் ஜீன்ஸ் லோறன்ஸ் இனத் துவேஷத்தைத் தூண்டும் இத்தகைய செயல்களைத் தாம் அடியோடு வெறுப்பதாகத் தெரிவித்துள்ளார்

இதற்கிடையில் இலங்கையர்களுக்கும், கனேடியர்களுக்கும் இடையில் அண்மைக்காலமாக மோதல் சம்பவங்கள் இடம்பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. (க-இ)

### திருமணம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பெண்களை திருமணம் செய்ய முன்வரும் வெளிநாட்டவர்கள் பற்றி முழு விபரங்களையும் விசாரணை செய்த பின்பே அவர்களுக்கு அனுமதி வழங்கப்படும். இதேநேரம் வெளிநாடுகளில் இருக்கும் இலங்கைப் பெண்களை வெளிநாடுகளில் வைத்து திருமணம் செய்துவிட்டுச் சில மாதங்களின் பின்னர், இலங்கையிலேயே வியாபாரம் செய்து, நிரந்தரமாகத் தங்கப்போவதாக விண்ணப்பிக்கும் வெளிநாட்டவர்க்கு இனிமேல் எக்காரணம் கொண்டும் 'விசா' வழங்கப்படமாட்டாதென்றும் அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். -வி-இ

### வவுனியா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணம் செய்த உறங்கள் இருக்கையைக் காட்டும்படி நிர்ப்பந்தித்து ரயில்வே அதிகாரிகளைத் தாக்கினர்.

பின்னர் இரண்டு ஜலிஷ் பிரசைகளிடமிருந்து 16 ஆயிரம் ரூபாவையும், 300 அமெரிக்க டொலர்களையும், 100 ஸ்ரேலிங் பவுண்களையும் பலவந்தமாக அபகரித்தனர்.

உள்ளூர்ப் பயணி ஒருவரிடமிருந்து தங்கச் சங்கிலியும், 4 மோதிரமும் கொள்ளையர்களால் அபகரிக்கப்பட்டது என்று அந்த ரயில்வே அதிகாரி தெரிவித்தார்.

இந்த இரண்டு கொள்ளையர்களுடன், இனம் காணப்படாத 5 பேர் சேர்ந்துகொண்டதாகவும், பின்னர் அவளைக்கும், வெலிவராயாவுக்கும் இடையில் கொள்ளையர்கள் ரயிலிலிருந்து குதித்துத் தப்பிச் சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவ்வைப் பகுதியில் ரயில் சென்று கொண்டிருக்கும் போதே இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் எனப் பொலிசார் தெரிவித்துள்ளனர். -க-இ

மணிவாசகம்

"பெரும்பாலான மனிதருக்கு அனுபவம், கடந்து விட்ட பாதைமேல் ஒளி வீசும் கப்பலின் பின்புற விளக்குகள் போலத்தான்"

- சேம்பல் காலெரிட்ஜ்.

# நமது நோக்கு

## அரசுக்கு அக்கறை ஏது?

ஐ. நா. வின் மத்தியஸ்தத்தின் கீழான சமாதான முயற்சி யோசனையை இலங்கை அரசு நிராகரித்துவிட்டது எனச் செய்தி வந்துள்ளது.

ஐ. நா. வின் உதவி தேவையேயொழிய மத்தியஸ்தம் தேவையில்லை என முகத்தில் அறைந்தது போலப் பிரதமர் கூறியுள்ளாராம்!

உலகளாவிய ஒத்துழைப்புக்கான உலக அமைப்பின் சார்பிலேயே நான்கு நோபல் பரிசுபெற்ற அறிஞர்கள் சமாதான யோசனையை முன்வைத்தார்கள்.

டைனமைற் வெடிபொருளைக் கண்டு பிடித்தவர் அது அழிவுக்குப் பயன்படுவதைக் கண்டு வருந்தினார்; தனது அளப்பரிய செல்வத்தை உலக அமைதிக்கும் மனிதகுல நலத்திற்கும் உதவுவோருக்கு ஆண்டு தோறும் பரிசளிக்கத் திட்டம் வகுத்தார்.

1901 முதல் நோபல்பரிசு வழங்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில், அமெரிக்கா, அயர்லாந்து, பெல்ஜியம், நெதர்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த நோபல்பரிசுபெற்ற பேரறிஞர்களே இந்த நாட்டின் இனப்பூசலைத் தடுக்க ஆலோசனைகளை முன்வைத்துள்ளனர்.

இதனை நிராகரிப்பதன் மூலம், சமாதானத்திற்கான அரசின் அக்கறை பற்றி அறிய உலகிற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது?

பௌத்த சிங்களவர்களுக்குத்தான் இந்த நாடு முற்றுமுழுதாக உரியது என்ற மனவியலால் தமிழரை அடக்கி ஒடுக்கி, அரசியல் உரிமை அற்றவர்களாகப் புறந்தள்ளிவிடலாம் என்று அரசு தொடர்ந்தும் எண்ணிடலாம்?

இன்றல்ல, 1936லேயே, சுதந்திரம் கிடைக்கு முன்பே, தனிச்சிங்களவர்களைக் கொண்ட மந்திரிசபை குழு அமைத்துச் செயற்பட்டவர்களுக்கு ஐ. நா. மத்தியஸ்தம் கரும்பாக இனிக்குமா?

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம், மொழியுரிமை மறுப்பு, இனக்கலவரம், பெரும்பான்மை இனத்தவரைக் கொண்ட படையினரின் படுகொலை, பொருளாதாரத் தடைகள் போன்றவற்றால் தொடர்ந்தும் தமிழ் மக்களை ஒடுக்கலாம் என்ற கனவு கலையும் காலம் கனிந்து வருவது போலத் தெரிகிறது!

★ யாழ். மாவட்டத்தில் வருடாந்தம்

# ரியூட்டறி கல்விக்கு மாணவர் ரூ. 9 கோடி செலவிடுகிறார்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் 7500 ஆசிரியர்கள் கல்வி போதிக்கிறார்கள். இவர்களுக்கு வருடாந்த சம்பளமாக 21 கோடி ரூபாவை அரசு வழங்கிவருகிறது. ஆனால் கல்வி கற்கும் இரண்டு லட்சம் மாணவர்களில் எண்பதினாயிரம் மாணவர்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட "ரியூற்றறி"களுக்குச் சென்று கல்வியைப் பெற்று வருகின்றனர். இதற்கு வருடாந்தம் ஒன்பதுகோடிரூபாவை ரியூட்டறிகளுக்கு செலுத்தி வருகின்றனர்.

தனியார் கல்வி நிலையங்களில் போதிக்கும் ஆயிரத்திநூறு ஆசிரியர்களில் 90 சதவீதமானவர்கள் அரச ஊதியம் பெறும் ஆசிரியர்களாவர். மிகுதிப்பத்துவீதமானவர் திணைக்களங்களில் தொழில்புரிவோராவர். தனியார் கல்வி நிலையங்களில் மாணவர்களுக்கு பாடசாலைகளில் முதலாம் தவணைப் போதனை நடைபெறும்போது, தாங்கள் அதிகம் கல்வி கற்பிப்பதாக இரண்டாம் தவணைப் பாடங்களையும் கூடுதலாகக் கற்பிப்பது மாணவர்களை குழம்பிய நிலைக்கு கொண்டுவருகின்றது.

இந்நிலையை நன்குணர்ந்து இப்பிரதேசத்தில் பணிபுரியும் வலய கல்வி ஆலோசகர்கள் திட்டமிட்டு மாற்றி பாடசாலைகளில் மாணவர்கள் திறம்பட கல்வி பயில வழியேற்படுத்த வேண்டும்.

இத் தகவல்கள் உயர் கல்வி பற்றிய கருத்தரங்கில் நேற்றுமுன்தினம் வலியுறுத்தப்பட்டது.

(எஸ் சி)

தமிழக மக்களை அமைதி காக்க

# முதல்வர் 'ஜெ' கோரிக்கை

(சென்னை)

அமைதிக்கு பெயர் எடுத்த தமிழக மக்கள் தொடர்ந்தும் அமைதியையும் ஒற்றுமையையும் காக்கவேண்டுமென தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா கோரிக்கை விடுத்துள்ளார்.

சென்னை குண்டுவெடிப்புத் தொடர்பாக அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார். முதல்வர் மேலும் தெரிவிக்கையில்: இச்சம்பவம் குறித்து குற்றப் புலனாய்வுத் துறையினரின் விசாரணைக்கு உத்தரவிடப் பட்டுள்ளது. குற்றவாளிகள் விரைவில் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்படுவர் என்றார்.

இதேவேளை சம்பவம் நடைபெற்ற இடத்தை மாநில ஆளுநர் திரு. சென்னாரெட்டி நேற்றுமுன்தினம் மாலை நேரில் பார்வையிட்டு உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

இச்சம்பவம் ஒரு தனிக்கூட்டத்தினரின் வேலையாகத்தோன்றுவதாகவும் மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு நிலையை பேணிப் பாதுகாக்க மாநில அரசு உடன் நடவடிக்கை மேற்கொள்ளும் எனவும் ஆளுநர் சென்னாரெட்டி கூறினார்.

இதற்கிடையில் சென்னை வெடிகுண்டுச் சம்பவம் குறித்து பல்வேறு தலைவர்களும் அதிர்ச்சியும் கண்டனமும் தெரிவித்துள்ளனர்.

-சி

பாகிஸ்தானில்

# இராணுவ பயிற்சி பெற்ற இந்திய இளைஞர்கள் கைது

(புதுடில்லி)

பாகிஸ்தானில் இராணுவப் பயிற்சி பெற்றதாகக்கருதப்படும் நூற்றுக்கும் மேற்பட்ட இந்திய இளைஞர்கள் காஷ்மீர் பள்ளத்தாக்கில் உள்ள சோருமர் கிராமத்தில் இந்திய இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

18 வயதிற்கும் 21 வயதிற்கும் இடைப்பட்டவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இவர்கள்நீண்டகாலமாகப் பாகிஸ்தானில் பயிற்சி பெற்று வந்ததாகவும் இந்திய மத்திய புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(க-சி)

வெனிசுவேலாவில்

# வெப்பக் காற்றினால் 100 பேர் உயிரிழப்பு

(காரக்கஸ்)

வெனிசுவேலா நாட்டில் நேற்று முன்தினமிரவு தலைநகர் காரக்கஸ்ஸில் வீசிய கடுமையான வெப்ப புயல் காற்றினால் சுமார் நூறுபேர்இறந்துள்ளனர் இதில் பல குழந்தைகளும் அடங்கும்.

தரைத்தளிலும், காட்போட் மட்டைகளினாலும் தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த உறைவிடங்கள் அங்கு தூங்கிக்கொண்டிருந்தவர்கள் மீது சாய்ந்து பெரும் உயிரிழப்பை ஏற்படுத்தியுள்ளது.

மணிக்கு 90 கி. மீ. வேகத்தில் வீசிய இச்சூறுவளிக் காற்றினால் நாட்டின் பலபகுதிகளிலும் பெரும் வெள்ளப் பெருக்கும் ஏற்பட்டுள்ளதாம்.

-சி

## தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் நாவலர் மண்டபமுன்றலில் இன்று நடைபெறும். தெய்வீக இசையரங்கில் செல்வி சரோஜா ஐஸ்ரின் பாடுகிறார்கள். வயலின் ஆர். எஸ். கேசவமூர்த்தி மிருதங்கம் எஸ். துரைராசா (ம

## வாளாதிருத்தல் தகுமோ?

அன்னை தமிழும்
அனலிடைப் புழுவென
அனுதினம் துடிப்ப தேனோ
கண்ணீரில் ஓடமாய்
கரை காணு நெஞ்சங்கள்
கண்டும் நீ மௌனம் ஏனோ?
வண்ண மயில்மீது
வலம்வரும் இறை நீயும்
வாளா திருத்தல் தகுமோ?

- நெடுந்தீவு லக்ஷ்மன்

(இன்று நல்லூர் கந்தன் 18ம் நாள் உற்சவம்)

குளோரின் வரவில்லை

## நீர் சுத்திகரிப்பு பாதிப்பு

(திருநெல்வேலி)

யாழ். சுகாதாரப்பணிமனைக்கு தேவையான குளோரின் கப்பலில் எடுத்துவரப்படவில்லை என பிராந்திய சுகாதார வைத்தியப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கப்பலில் அனுப்பிவைக்கப்படும் என தெரிவிக்கப்பட்ட போதிலும் வந்த கப்பல்களில் குளோரின் அனுப்பிவைக்கப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(4ம் பக்கம் பார்க்க)

## இராசிபலன்

10-08-1993

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு ஆடி 26)

அட்டமி முழுவதும் பரணி மு. இ. 11-42 வரை இராகு காலம் மாலை 3-04 முதல் 4-34 வரை சுபநேரம் காலை 10-34 முதல் 12-04 வரை சித்தயோகம்.

மேடம்: பொருள் லாபம், சுபகாரியங்கள் மகிழ்ச்சி.

இடபம்: நோய்களால் தொல்லை, அவமானம், மனபயம்.

மிதுனம்: புத்திமேன்மை, குடும்பசுகம், புத்திரசெலவு,

கடகம்: தெய்வபுலம்பல், வீண்செலவு, பயணம்

சிங்கம்: தொழில் சங்கடம், மனவெறுப்பு, யோசனை.

கன்னி, வாழ்க்கைக்கவலை, இறுநீர்ரோகம், வெறுப்பு.

துலாம், நண்பர் ஆலோசனை, கடன்வரவு, தானதர்மம்.

விருச்சிகம்: சுகவாழ்க்கை, ஆபரண வசதி, பணவரவு.

தனுசு: காரிய தாமதம், வீண்வம்பு, மனோதுக்கம்

மகரம்: புதிய முதலீடு, தொழில் லாபம் பாராட்டு.

கும்பம்: அதிகாரிகள் நன்மை, விவசாய லாபம், காரியசித்தி.

மீனம்: மனவிரக்தி. முயற்சித் தோல்வி, அமைதிக் குறைவு

ஜோஸ்யர்

பல பதவிகளிலிருந்து

# சண்முகலிங்கம் ராஜினாமா

(கொழும்பு)

நிதியமைச்சின் பிரதிச்செயலர் திரு. கே. சண்முகலிங்கம் தான் வகித்து வந்த மேலதிக பல பதவிகளிலிருந்து ராஜினாமா செய்துள்ளார்.

நாடாளுமன்றில் தம்மீது சுமத்தப்பட்ட பல குற்றச்சாட்டுகளையடுத்தே இப்பதவிகளிலிருந்து தாம் விலகுவதாக ஜனாதிபதி விஜயதுங்கவுக்கு திரு. சண்முகலிங்கம் தெரிவித்துள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம் உள்ளூராட்சி திணைக்களத்துடன்
யாழ். மாவட்ட சித்த வைத்தியக் கூட்டுறவுச் சங்கம்
இணைந்து நடாத்தும்
"சித்தமருத்துவத்தை மக்கள் மயப்படுத்தல்"
சம்பந்தமான
★ கருத்தரங்கு ★
மேற்படி கருத்தரங்கு
ஆவணி மாதம் 29-ம், 30-ம் திகதிகளில்
யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில்
நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் பங்குபற்ற விரும்புபவர்கள் 20-8-1993-ம் திகதிக்கு முன்னர் யாழ் உள்ளூராட்சித் திணைக்களத்திற்குத் தங்கள் பெயர், முகவரி போன்ற விபரங்களை அறியத்தரும் வண்ணம் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

எஸ். டிவகலாலா,
பிரா. உ. உ. ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

உள்ளூராட்சித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
02-08-1993.

(ஏ-3310)

அளவான நீர்ப்பாசனம் அருமையான சிம்மாசனம்

# சென்னை குண்டு வெடிப்பு: மத்திய புலனாய்வுத்துறை விசாரணை செய்ய வேண்டும்

## — ஜெயலலிதா வலியுறுத்து

(சென்னை)

ஆர். எஸ். எஸ் தலைமை அலுவலகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் குறித்து மத்திய புலனாய்வுத்துறை விசாரணை மேற்கொள்ள வேண்டுமென தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தம்மை நேற்றுச் சந்தித்த மத்திய உள்துறை இணையமைச்சர் ராஜேஸ் பைலட்டிடம் உறுதியாக தெரிவித்தார்.

நேற்று சென்னையில் இருவருக்குமிடையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே முதல்வர் ஜெயலலிதா இதனை வலியுறுத்தியுள்ளார்.

பம்பாய், கல்கத்தாவில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் போன்று இதுவும் பாரதூரமானதாகையால் மத்திய புலனாய்வு விசாரணை அவசியம் என்றும் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 11ஆக அதிகரித்துள்ளது. (க)

# புலிகளுக்கு தொடர்பில்லை

(சென்னை)

சென்னையில் நேற்று முன் தினம் நடைபெற்ற குண்டு வெடிப்புக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் எதுவித தொடர்பும் இல்லையென்று தமிழக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் பம்பாயில் 13 இடங்களில் குண்டு வெடிப்புகளை நிகழ்த்திய இஸ்லாமியத் தீவிரவாதிகளே சென்னைகுண்டு வெடிப்பையும் நிகழ்த்தியிருக்க கூடுமென பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (வி)

# ஜெயலலிதா பதவி விலக வேண்டும்

## — வாழப்பாடி

(சென்னை)

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா உடன் பதவி விலகவேண்டும் என தமிழக இந்திராகாங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

சென்னையில் பத்திரிகையாளர் மத்தியில் நேற்று உரையாற்றிய அவர், முதல்வர் ஜெயலலிதாவின் நிர்வாக திறமையின்மையாலேயே குண்டு வெடிப்புச் சம்பவம் நடைபெற்றது. எனவே முதல்வர் ஜெயலலிதா பதவி விலகுவது அவசியம் என்று மேலும் தெரிவித்தார். (க)

# ஒன்றரைமணி தாமதித்தே முதல்வருக்கு தகவல்

(சென்னை)

சென்னையில் நேற்று முன் தினம் இடம் பெற்ற ஆர். எஸ். எஸ். கட்டிட குண்டு வெடிப்புச் சம்பவம் பற்றிய தகவல் முதல்வர் ஜெயலலிதாவுக்கு சுமார் ஒன்றரை மணி நேரத்திற்குப் பின்பே அறிவிக்கப்பட்டதாம்.

தமிழக ஆளுநர் டாக்டர் சென்னாரெட்டிக்கு இச் சம்பவம் குறித்து தகவல் தெரிவிக்க தமிழக நிர்வாகத்தார் மறந்ததையிட்டு மத்திய உள்துறை அமைச்சர் ராஜேஷ் பைலட் அதிர்ச்சி தெரிவித்துள்ளார்.

தமிழக பொலிசார் சம்பவம் நடைபெறுவதற்கு முன் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதில் அசிரத்தை காட்டியதாகவும் அவர் கவலை வெளியிட்டுள்ளார். (க)

**குளோரின்**

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இதனைக் நீர் சுத்திகரிப்பிற்கு குளோரின் வழங்கமுடியாதுள்ளதாகவும் நோய்த்தடுப்பை மேற்கொள்ள இது அவசியமானது எனவும் தெரிவித்துள்ளார். -157-இ

**புலிகள் தாக்கிய**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டு வெளியேற வேண்டாம் என்றும் அவர்களுக்கு போதிய பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

அண்மையில் விடுதலைப்புலிகள் மேற்படி பகுதியில் உள்ள எலுவங்குளம் வணாத்தவில்லு பொலிஸ் நிலையங்கள் மீது மேற்கொண்ட திடீர் தாக்குதலினால் அச்சமடைந்த பொது மக்கள் கரைதீவு காட்டுக் குழிக்குளம், எலுவங்குளம், வணாத்தவில்லு ஆகிய கிராமங்களிலிருந்து இடம் பெயர்ந்து வருவதாக கூறப்படுகின்றது.

மேற்படி கிராமங்களின் எல்லைப்புறங்களுக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்படுமென்றும், இக் கிராமங்களுக்கு பாதுகாப்புக்காக மேலதிகமாக இராணுவமும் பொலிஸும் நிறுத்தப்படுவதுடன் நவீன ஆயுதங்களும், சக்தி வாய்ந்த தொலைத்தொடர்பு சாதனங்களும் வழங்கப்படுமென்று பிரதமர் திரு ரணில் விக்கிரமசிங்கா உறுதியளித்துள்ளார். (வி)

**பல பதவிகளிலிருந்து**

(3ம் பக்கத் தொடர்ச்சி)

அண்மைக்காலமாக நிதியமைச்சின் செயலர் திரு. பாஸ்கரலிங்கத்திற்கும் பிரதிச்செயலர் திரு. சண்முகலிங்கத்திற்கும் எதிராக பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வருவதும் தெரிந்ததே. (இ)

**கைதிகளின்**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தகவல் தருகையில் விமானப்படை விமானம் ஒன்றில் இவர்கள் கொழும்புக்கு கொண்டுவரப்படுவார்கள். யுத்தக்கைதிகளின் உறவினர்கள் 78 பேர் யாழ்ப்பாணம் சென்றனர். இவர்களில் 32 பேர் கொழும்பு திரும்பி விட்டனர். ஏனையோர் யாழ்ப்பாணத்தில் இன்னமும் தங்கியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க)

# சுவீடன் விமானகண்காட்சியில் விமானம்வெடித்துச்சிதறியது

(ஸ்டொக்ஹோம்)

சுவீடனின் தலைநகர் ஸ்டொக்ஹோமில் நேற்று நடைபெற்ற விமானக் கண்காட்சி ஒன்றில் ஜெட் விமானம் ஒன்று பொது மக்கள் முன்னிலையில் நடுவானில் வெடித்துச் சிதறியது.

இந்த விமானத்தின் இரண்டு விமானிகளும் மிகச் சாதுரியமாக பரசூட் மூலம் உயிர் தப்பியது ஓர் அதிசயமான செயல் என்று கூறப்படுகின்றது.

மேற்படி விமானம் நடுவானில் வெடித்துப் பார்வையாளர் மத்தியில் விழுந்த போதிலும், 3 பேருக்கு மட்டுமே சிறு காயங்கள் ஏற்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. -வி-இ

# ஒளிவீச்சு வீடியோ சஞ்சிகை

(யாழ்ப்பாணம்)

நிதர்சனம் தயாரித்து வெளியிடும் 1993 ஜூலை மாத ஒளிவீச்சு வீடியோ சஞ்சிகை இன்று 10ம் திகதி யாலை நான்கு மணிக்கு நிதர்சனம் ஒலி, ஒளி தொழில் நுட்பக் கல்லூரியில் காண்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# காரைநகர் தபால்கள்

(வட்டுக்கோட்டை)

காரைநகரில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களின் சாதாரண, பதிவுத் தபால்கள் அனைத்தும் கப்பல் மூலமாக காரைநகரில் இருந்து கிடைத்துள்ளது.

இக்கடிதங்களை இடம் பெயர்ந்துள்ள காரைநகர் மக்கள் அனைவரும் அழிபுரம் தபாலகத்தில் இயங்கும் காரைநகர் தபால் கந்தோரில் வந்து பெற்றுக் கொள்ளுமாறும் காரைநகர் தபாலதிபர் கேட்டுக்கொண்டுள்ளார். (139)

# நேர்முகப் பரீட்சை ரத்து

(யாழ்ப்பாணம்)

எழுதுநர் சேவைக்கும் அதனோடு இணைந்த சேவைகளுக்கும் வடக்கு கிழக்கு மாகாணசபையால் எதிர் வரும் 15ம், 20ம் திகதிகளில் நடைபெற இருந்த நேர்முகப் பரீட்சை ரத்துச் செய்யப்பட்டுள்ளது. இந்நேர்முகப் பரீட்சை யாழ். செயலகத்தில் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது இதற்கான திகதிகள் காலகதியில் அறிவிக்கப்படும் எனவும் இதன் நிமித்தம் பரீட்சார்த்திகள் திருகோணமலைக்கு செல்ல தேவையில்லையெனவும்யாழ். அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (162)

**1988**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போது வெளியிட்ட அறிக்கைகள் பற்றி பொதுமக்களும் தமது அபிப்பிராயங்களை எழுத்து மூலம் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு எதிர் வரும் ஒக்டோபர் மாதம் 15ம் திகதிக்கு முன் தெரிவிக்கலாம் என அரசு அறிவித்துள்ளது.

இவ்விதமேற்படும் பட்சத்தில் பொதுமக்களை நேரடியாக வரவழைத்து அவர்கள் சமர்ப்பித்த கருத்துக்கள்பற்றி விசாரணை செய்யவும் தெரிவுக்குழு முடிவுசெய்துள்ளது. (இ-வி)

**அரசஅதிபர்**

(1ம்பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில் தம்மைவிடுவிப்பதற்குரிய சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென அரசாங்கத்தையும் அரச உயரதிகாரிகளையும் கேட்டுக்கொள்வதாகவும் கூறினார்.

இதற்கிடையில் நேற்று 12வது நாளாக உண்ணாவிரதமிருக்கும் யுத்தக்கைதிகளின் உடல்நிலை பெரிதும் பாதிப்படைந்துள்ளதாகவும் எழுந்து நடமாடமுடியாதநிலைமையை உண்ணாவிரதிகள் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

# விடுதலைப்புலிகள் இன்று வெளிவருகிறது

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப்புலிகள்' ஆடி மாத இதழ்இன்றுவெளிவருகின்றது.

இவ்இதழில் ஜனாதிபதி டி. பி விஜேதுங்க பதவியேற்றதிலிருந்து தோன்றியுள்ள குழப்பமான ஒரு நிலையில் டி. பி விஜேதுங்கவின் அரசுஇனப்பிரச்சினைக்குசமாதான தீர்வு காண்பதா அல்லது யுத்தத்தை தொடர்வதா? என்பது குறித்து தடுமாறுவதாக முதல் பக்கத்திலும் 'இதய தாக்குதல்', தமிழ் ஈழ நீதிமன்றம், தமிழ்இன அழிப்பு ஜூலை 1983, ஓயாத அலைகளில் எழுதிய காவியம். மூன்றாண்டுப் போரில் வெற்றியார் பக்கம் என்ற தலைப்புக்களிலான கட்டுரைகளும் மற்றும் பல விடயங்களும் பிரசுரமாகியுள்ளன.

செஞ்சோலை குழந்தைகளுடன் தலைவர் திரு. வே. பிரபாகரன் குதூகலமாக அமர்ந்திருக்கும் காட்சியும் இந்த இதழில் இடம்பெற்றுள்ளது (க)

★ தமிழகத்தில்

# இந்து முஸ்லிம் கலவரம் ஏற்படும் அபாயம்

(சென்னை)

தமிழ் நாட்டில் இந்து, முஸ்லீம் கலவரம் ஏற்படும் அபாயம் உருவாகி வருவதால் தமிழ்நாடு முழுவதும் பொலிஸார் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் நேற்று திருப்பூர் நகரில் இனந்தெரியாத கும்பலொன்று இரண்டு முஸ்லீம்கள் மீது மேற்கொண்ட தாக்குதலில் ஒருவர் பலியானதாகவும் வேறு ஒருவர் படுகாயமடைந்துள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் ஒரு பதற்ற நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அது ஒரு கலவரமாக வெடிக்கலாமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (வி)

**இராணுவ**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சென்று 'குமாரி' கப்பல் மூலம் காங்கேசன்துறை சேர்ந்தனர். பின்னர் பலாலியில் இருந்து கொழும்பு பயணமாகினர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (க-இ)

**மட்டு. ராணுவ**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறது.

இவ்இராணுவ நடவடிக்கையினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் 6 தமிழ் கிராமங்களிலிருந்து மக்கள் முற்றாக வெளியேறியுள்ளதாகவும் அதுடன் பல தமிழ் கிராமங்களிலிருந்து சுமார் 62 ஆயிரத்து 100 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

இவ்வாறு வெளியேறிய குடும்பத்தினர் அடிப்படை வசதிகள் இன்றி பெரிதும் இன்னலுறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -க-இ

**அரசை உடன்**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விடுக்கப்படவுள்ள முக்கிய கோரிக்கை இதுவாகும்.

இதுதொடர்பாக நேற்று எதிர்க்கட்சித்தலைவின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்று நடைபெற்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர்தர்மசிறி சேனநாயக்கா இதை தெரிவித்ததாவது:

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் அரசு உலக வங்கி மற்றும் சர்வதேச நிதி ஸ்தாபனங்களின் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு பொதுமக்களுக்கும் கிடைத்துவரும் பலவிதமான நிவாரணங்கள், மானியங்கள் போன்றவை ரத்தாகிப் போவதற்குக் காரணமாக உள்ளது.

காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசா அப்போது உலக வங்கியின் நிபந்தனைகளுக்கு உடன்பட மறுத்தார். ஜனசவிய மற்றும் மாணவர் மதிய உணவுத்திட்டம் போன்றவற்றை ரத்துச் செய்யுமாறு உலக வங்கி அப்போது அவரிடம் கேட்டதற்கு அவர் கண்டிப்பாக மறுத்துவிட்டார்.

ஆனால் விஜேதுங்காவின் அரசு உலகவங்கியின் பலவிதமான நிபந்தனைகளுக்கு உட்பட்டதன் காரணமாகவே பாரிசில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இலங்கைக்கு 840 கோடி அமெரிக்கடொலர்களை பெறக் கூடியதாக இருந்தது என்றார்.

1953 ஆண்டு வாழ்க்கைச் செலவை எதிர்த்து ஹர்த்தால் நடத்தப்பட்டது இன்றும் மக்கள் அதே ஒரு நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர் என எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் பலரும் நேற்று சுட்டிக்காட்டினர். (இ)

# கிரிக்கெட் தொடரில் இந்தியா வெற்றி

(கொழும்பு)

இந்தியாவுக்கும்-இலங்கைக்கும் இடையில் கொழும்பில் நடைபெற்ற 3வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நேற்று வெற்றி - தோல்வியின்றி முடிவடைந்தது.

இலங்கை, அதன் 2வது இன்னிங்ஸில் 6 விக்கெட் நஷ்டத்துக்கு 352 ஓட்டங்களைப் பெற்றது. ரொசான் மஹாநாம-151 ஓட்டங்களையும், ஹஷன்திலகரட்ண-86 ஓட்டங்களையும் எடுத்தனர்.

ஸ்கோர் விபரம்: இலங்கை: 351, 352-6 இந்தியா 446: மூன்று டெஸ்ட் தொடரில், இந்தியா 1-0 என்ற ரீதியில் வெற்றிபெற்றுள்ளது.

இந்த மூன்று டெஸ்ட் தொடரில், இலங்கை வீரர் அரவிந்த டி சில்வாவும், இந்திய வீரர் மனோஜ்பிரபாகரும் சிறந்த ஆட்டக்காரராகத் தெரிவு செய்யப்பட்டனர். (வி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் தாபனத்தாருக்காக, யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the Gennoral Post office, Sri Lanka under Licence Number B/10336/B